# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் மே திங்கள் 29–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சியில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்கண்ட விபரப்படி பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.மு.முகம்மது முகைதீன், மேலாளர் | 2/2007<br>3/2007<br>4/2007 | 475/–<br>592/–<br>1742/– |
| 2 | திருமதி. அ. நிர்மலா ஜாய், இளநிலை உதவியாளர் | 4/2007 | 124/– |
| 3 | திருமதி. எஸ். சுதா, நகரமைப்பு ஆய்வாளர் | 4/2007 | 680/– |
| 4 | திரு.ஆர்.தங்கராஜ், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் | 4/2007<br>5/2007 | 1385/–<br>91/– |
| 5 | திருமதி.கே.மீனாம்பாள், மகப்பேறு ஆயா | 4/2007 | 392/– |
| 6 | திரு.வெ. நடராஜா, அலுவலக உதவியாளர் | 4/2007 | 263/– |

அ.குறிப்பு : அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண். 190 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 2**

இந்நகராட்சியில் சுனாமி பிரிவில் பணிபுரியும் கீழ்கண்ட பணியாளர்கள் அலுவலக விசயமாக பயணம் மேற்கொண்ட வகையில் கீழ்க்கண்டவாறு பயணப்படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியாளர் மற்றும் பதவி | மாதம் | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ச. ரவி, உதவி செயற் பொறியாளர் | 4/2007 | 5523/– |
| 2 | திருமதி. வி.எஸ்.சுப்பு லெஷ்மி, இளநிலை பொறியாளர் | 3/2007<br>4/2007 | 2666/–<br>1491/– |
| 3 | திருமதி. எம். சாந்தி, சமுதாய அமைப்பாளர் | 4/2007 | 206/– |

அ.குறிப்பு : சுனாமி நிதியில் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண். 191 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :3</u>**

தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்கள் பேரவை, சென்னை–க்கு சந்தாத் தொகை அனுப்பி வைக்குமாறு நகர்மன்றத் தலைவர்களின் பேரவைத் தலைவர் அவர்களின் 13.04.2007–ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இந்நகராட்சிக்கான சந்தா கட்டணத் தொகை ரூ.1500/– ஐ தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்கள் பேரவை, சென்னை–16.க்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தை முன்னிட்டு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகர்மன்றத் தலைவர்கள் பேரவை, சென்னை–16–க்கு சந்தா தொகை ரூ. 1500/– செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 192 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :4</u>**

குளச்சல் நகராட்சி சுனாமி நிவாரண பிரிவிற்கான அறிக்கைகள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் அலவலகத்திற்கு அனுப்புவதற்காக ஜெராக்ஸ் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் செய்த வகையில் ரூ.2432/–சம்மந்தப்பட்டவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சுனாமி நிதியில் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 193 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :5</u>**

குளச்சல் நகராட்சிக்கு 12–வது நிதிக்குழு திட்ட மானியமாக 2005–2006–ஆம் ஆண்டிற்கு ரூ.12,63,444/– திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். 42936/2006/பி2 நாள் 21.02.2006–ல் நிதி ஒதுக்கீடு செய்து அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவுநீர் உறிஞ்சும் லாறி ஒன்று மேற்படி நிதியில் வாங்குவதற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.1318 நாள் 31.07.2006 மூலம் தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு இவ்வலுவலகக் கடிதம் ந.க.எண். 104/2006/அ2 நாள் : 31.07.2006–ல் நிர்வாக அனுமதி வேண்டி கடிதம் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அலுவலகம், திருநெல்வேலியில் 16.04.2007–ல் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் கழிவுநீர் உறிஞ்சும் லாரிக்கு பதிலாக மாற்று திட்டம் தயார் செய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார். இது குறித்து நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஆணையாளர், பொறியாளருடன் கலந்தாய்வு மேற்கொண்டதில் இந்நகராட்சிக்கு குப்பைகள் கொட்டுவதற்கென்று இடமில்லாததால் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் 12–வது நிதிக்குழு திட்டத்தில் உள்ள தொகைக்கு நிலம் வாங்குவதற்கும், தற்போது இந்திரா காலனியில் குப்பைகள் தற்காலிகமாக கொட்டப்பட்டு வரும் இடத்தின் அருகிலேயே உள்ள இடத்தை வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி நகராட்சி தற்போது குப்பை கொட்டி வரும் இடத்திலிருந்து வார்டு எண். D, பிளாக் எண். 2–ல் உள்ள புல எண்கள் 39 முதல் 44 வரையிலான 1 ஏக்கர் 17 செண்ட் (0.47.42. ஏர்) நிலத்தினை வாங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நகர்மன்றத் தலைவரால் அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட இடத்தினை 2005–2006–ம் ஆண்டிற்கான 12–வது நிதிக்குழு திட்டத்தில் உள்ள திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 194 ஒத்திவைக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 6</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.66830/2006/பி2 நாள் 05.04.2007–ன்படி 2006–2007ம் ஆண்டிற்கு 12–வது நிதிக்குழு திட்ட மான்யம் ரூ. 12,63,442/– 2–வது தவணைத் தொகையாக பெறப்பட்டுள்ளது. இத்திட்ட நிதி கீழ்க்கண்ட தலைப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| | | |
|---|---|---|
| 1 | 50% நிதி திடக்கழிவு மேலாண்மை செயலாக்க பணிகள் செய்திட | : ரூ. 6,31,721/– |
| 2 | 25% நிதி சாலை மற்றும் வடிகால் பராமரிப்பு பணிகள் செய்திட | : ரூ. 3,15,861/– |
| 3 | 25% நிதி கணனி பராமரிப்பு மற்றும் மின்கட்டணம் செலுத்திட | : ரூ. 3,15,860/– |

**அ.குறிப்பு** : பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண். 195 பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண்: 7</u>**

இந்நகராட்சியின் கணனிப் பிரிவில் உதவி திட்ட அமைப்பாளர் பணியிடம் 12.01.2001 முதல் காலியாக உள்ளதால் அலுவலகப் பணிகளில் தாமதம் ஏற்படாமல் இருக்க கணனி இயக்கம் மற்றும் கணனி சேவைப் பணிகளைக் கவனிக்க தற்காலிக அடிப்படையில் உள்ளூர் கணனி மையத்தின் மூலமாக 01.06.2007 முதல் 89 நாட்களுக்கு பணியாளர் நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச செலவு ரூ. 16,000/–க்கு அனுமதிக்கவும் மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**தீர்மானம் எண். 196 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :8</u>**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 6 அங்கன்வாடி கட்டிடங்களுக்கு தொண்டு நிறுவனம் மூலமாக Wiring பணிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு தற்போது மின் இணைப்பு வசதி செய்து கொடுக்க வேண்டியுள்ளது. இதற்கு ஒரு இணைப்பிற்கு ரூ. 1,600/– வீதம் 6 இணைப்புகளுக்கு மொத்தம் ரூ.9,600/– மின்வாரியத்திற்கு செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு :** அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ரூ. 9,600/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.
**தீர்மானம் எண். 197 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :9</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் IDSMT திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு வரும் வணிக வளாகத்தில் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. மேற்படி வணிக வளாகத்தில் தமிழ்நாடு மின்சார வாரியம் அலுவலக உபயோகத்திற்கென இட ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொண்டதின் பேரில் இந்நகர் மன்றத் தீர்மானம் எண். 179 நாள் 20.04.2007–ல் உரிய ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டக சாலை தனி அலுவலர் அவர்கள் ரேசன் கடைக்கு வேண்டி இட ஒதுக்கீடு செய்து தருமாறும், மாவட்ட நூலக அலுவலர் அவர்கள், குளச்சல் கிளை நூலகத்திற்கு இட ஒதுக்கீடு செய்து தருமாறும் கடிதம் அளித்துள்ளார்கள். மேற்கண்ட நிறுவனங்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தால் நகராட்சிக்கும் நிரந்தர வருவாய் கிட்ட வாய்ப்புள்ளது. எனவே, மேற்படி கிளை நூலகத்திற்கான

இடம் ஒதுக்கீடு செய்யவும், ரேசன் கடைக்கான இடம் ஒதுக்கீடு செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் இது தொடர்பான பணிகளுக்கு தயார் செய்யப்பட்டுள்ள ரூ. 1,85,000/–க்கான மதிப்பீட்டிற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 198 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :10</u>**

கடந்த ஏப்ரல் மாதம் 10–ம் தேதி பெய்த கோடை மழையின் போது இடி மின்னல் தாக்குதல் காரணமாக இந்நகராட்சியின் கணனிப் பிரிவில் இயங்கி வந்த U.P.S. பழுதுப்பட்டது. இதன் காரணமாக வசூல் பணிகள் மற்றும் அலுவலகப் பணிகள் பாதிப்பு ஏற்பட்டது. எனவே உடனடியாக பழுது நீக்கம் செய்த வகையில் TECHCOM COMPUTER, Nagercoil- 1 நிறுவனத்திற்கு ரூ. 1900/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதையும், அதற்கான செலவினம் ரு. 1,900/– TECHCOM COMPUTER, Nagercoil- 1 அவர்களுக்கு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 199 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :11</u>**

இந்நகராட்சி கணனிப் பிரிவில் கடந்த ஏப்ரல் மாதம் 10–ம் தேதி பெய்த கோடை மழையின் போது ஏற்பட்ட இடி மின்னல் தாக்குதல் காரணமாக E.Mail System பழுதடைந்து முற்றிலுமாக செயலிழந்ததின் காரணமாக சம்பந்தப்பட்ட Lane Card, Net work card மாற்றிய வகையிலும் Board Service செய்த வகையிலும் Emyes Infonet & Multimedia, Nagercoil அவர்களுக்கு ரூ. 1800/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 200 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :12</u>**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக கணனிப் பிரிவிற்கு, இந்நகராட்சி கணனியிலிருந்து வைடு நெட்வொர்க் கனெக்சன் ஏற்படுத்தப்பட்ட வகைக்கு, 01.04.2007 முதல் 31.03.2008 முடியவுள்ள காலத்திற்கான வாடகை கட்டணம் இந்நகராட்சியின் பங்குத் தொகை ரூ. 4,000/– செலுத்தும்படி தெரிவித்துள்ள திருநெல்வேலி, நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் மின்னஞ்சல் கடிதம் ந.க.எண்.6219/சி2/2006 நாள் 04.05.2007 மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** வைடு நெட்வொர்க் கனெக்சன் –க்குரிய வாடகையாக ரு. 4,000/– அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 201 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :13</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான மினி லாறி எண். TN.74–5507–க்கு மின்கலம் பழுதடைந்து உள்ளதால் புதிய மின்கலம் வாங்குவதற்கு உத்தேசச் செலவு ரூ. 2,800/–க்கு மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** உத்தேச செலவு ரூ. 2,800/–க்கு அனுமதி வழங்கலாம்.

**தீர்மானம் எண். 202 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

__பொருள் எண் :14__

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆசாத் நகர், மலிக்காகிணறு சாலை மற்றும் வெள்ளிப்பிள்ளையார் கோயில் செல்லும் சாலைகளில் சுனாமி நிவாரணப் பணி திட்டத்தின்கீழ் (TEAP) ரூ. 30.00 இலட்சத்தில் மழைநீர் வடிகால் ஓடை மற்றும் தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்நிலையில் நகர்மன்றத் தலைவர் மற்றும் நகராட்சி பொறியாளருடன் தள ஆய்வு மேற்கொண்டதில் கீழ்கண்ட 19 மின்கம்பங்கள் சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு இடையூறாக சாலையின் நடுவே இருப்பதால் தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் மாற்றி சாலை ஓரத்தில் அமைத்து சாலைப் பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். எனவே கீழ்க்கண்ட 19 மின்கம்பங்களை சாலையின் ஓரத்தில் மாற்றி அமைப்பதற்கும், அதற்கு ஆகும் செலவுத் தொகையினை சுனாமி நிவாரண நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**மின்கம்ப எண் :**

| | |
|---|---|
| மலிக்காகிணறு சாலை | : FII/22, F1/20, F1/18, F1/12, F1/10, F1/1. FII/17, FII/3, FII/1, FI/5, FI/9 |
| வெள்ளிப்பிள்ளையார் கோயில் | : FI/12, FI/13, FI/3, FI/5, FI/16, FI/27, FI/14, FI/9 |

**அ.குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண். 203 பொருளில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் கொண்ட மின்கம்பங்களுடன் FII 19, FII 21, FII 25, FII 27, மற்றும் FII 34 ஆகிய எண்கள் கொண்ட மின்கம்பங்களையும் சாலை ஓரங்களில் மாற்றியமைத்திட தமிழ்நாடு மின்வாரியம், குளச்சல் அலுவலகத்துக்கு மனு அளித்திட ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

__பொருள் எண் :15__

குளச்சல் நகராட்சியில் மரமடி சந்திப்பிலிருந்து அந்தோணியார் காலனி வரை 10–ம் எண் முதல் 16–ம் எண் வரையிலான 7 கழிப்பிடங்கள் உள்ளன. பெண்களுக்கான மேற்படி கழிப்பிடங்களில் கதவு மற்றும் பைப் சேதமடைந்து லைட்டுகளும் எரியாமல் உள்ளன. ஆகவே அவற்றை மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.90,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.183, நாள் 20.04.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் :

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. இசக்கிமுத்து | 14.44%மதிப்பீட்டை விட அதிகம் |
| | திரு.எப். எட்வின் டேவிட் | 0.02% மதிப்பீட்டைவிட குறைவு |

இதில் திரு.எப். எட்வின் டேவிட் என்பவர் 0.02% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 204 அலுவலகக் குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :16</u>**

குளச்சல் நகராட்சியில் கொட்டில்பாடு பகுதியில் பெண்களுக்கான 4 கழிப்பிடங்கள் உள்ளன. சேதமடைந்துள்ள கதவுகள் மற்றும் பைப்புகள் மாற்றி மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.1,30,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.180, நாள் 20.04.2007–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 09.05.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் :

| | | |
|---|---|---|
| 1 | திரு.பி. தங்கமணி | 0.27% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.சி.சிவதாணுமாலையன் | 0.20% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் திரு.பி.தங்கமணி என்பவர் 0.27% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 205 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :17</u>**

குளச்சல் நகராட்சியில் துறைமுகத்தெரு–1–ல் உள்ள பெண்கள் கழிப்பிடம் எண்.1 மற்றும் 2–ல் உள்ள கதவுகள் சேதமடைந்துள்ளது. அதன் மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.25,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.181, நாள் 20.04.2007–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 09.05.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு.எப். எட்வின் டேவிட் | 0.004%மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி. இசக்கிமுத்து | 23.13% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் திரு.எப். எட்வின் டேவிட் என்பவர் 0.004% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 206 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :18</u>**

குளச்சல் நகராட்சியில் சைமன்காலனி பாலம் முதல் மரமடி சந்திப்பு வரை 3–ம் எண் முதல் 9–ம் எண் வரையிலான 7 பெண்கள் கழிப்பிடங்களில் கதவு மற்றும் பைப் சேதமடைந்து லைட்டுகளும் எரியாமல் உள்ளன. ஆகவே அவற்றை மராமத்து பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.80,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.182, நாள் 20.04.2007–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 09.05.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சிவதாணுமாலைய;ன | 7.25% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.பி.ஆரோக்கியதாஸ் | 0.004% மதிப்பீட்டைவிட குறைவு |

இதில் திரு.பி.ஆரோக்கியதாஸ் என்பவரின் 0.004% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்டபடுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 207 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :19</u>**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய வளாகத்தில் கடைகளுக்கு நடுவே கழிப்பிடம் அமைந்துள்ளது. தற்போது புராதன நகர மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நவீன கழிப்பிடம் கட்டப்பட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளதையடுத்து பழைய கழிப்பிடம் தற்போது உபயோகம் இல்லாமல் உள்ளது. மேற்கண்ட இடத்தின் மராமத்து பணிகள் மேற்கொண்டு Rolling Shutters அமைத்தால் கூடுதலாக 4 கடைகளை உருவாக்கலாம். கடைகளாக மாற்றுவதற்கு ரூ. 75,000/–க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு நகர்மன்றத் தீர்மானம் எண்.184, நாள் 20.04.2007–ல் அனுமதி வழங்கப்பட்டது. அதன் பேரில் 09.05.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சிவதாணுமாலையன் | 0.09% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.தங்கமணி | 4.18% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் திரு.சி.சிவதாணுமாலையன் என்பவர் 0.09% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படபடுகிறது.
**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 208 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 20</u>**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் குடிநீர் விநியோகம் செய்யும் பகிர்மானக் குழாய்களில் நகரின் பல இடங்களில் ( பள்ளி ஜங்சன், காரிதாஸ் காலனி, மரமடி, மெயின்ரோடு, சேவா பாரதி சங்கம் பக்கம், கொட்டில்பாடு, மார்க்கெட் ரோடு, அழகுவிளை, குளச்சல் பீச், களிமார், பாலத்தன்கரை, மாதா காலனி, மார்க்கெட் பின்புறம், சிங்காரவேலன் காலனி, ஏசுதாஸ் காலனி, பள்ளி ரோடு, அந்தோணியார் காலனி, பர்னட்டிவிளை) குழாய்கள் உடைந்து குடிநீர் வீணாகி வருகின்றது. எனவே அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் ரூ. 50,000/– க்கு மதிப்பீடு தயார் செய்து அதன்பேரில் 15.05.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சிவதாணுமாலையன் | 0.17% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.தங்கமணி | 4.54% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் திரு.சி.சிவதாணுமாலையன் 0.17% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பா.ர்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 209 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 21</u>**

குளச்சல் நகராட்சி குடிநீர் பிரிவில் குடிநீர் நீரேற்றும் நிலையங்களில் ( வெள்ளிப்பிள்ளையார் கோயில், போர்வெல் எண்.5 மற்றும் போர்வெல் எண். 1, பர்னட்டிவிளை போர்வெல் ) பழுதடைந்து இயங்காமல் உள்ள மின் மோட்டார்களை சரி செய்வது தொடர்பாக அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் ரூ. 33,000/– க்கு மதிப்பீடு தயார் செய்து அதன்பேரில் 15.05.2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சிவதாணுமாலையன் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.தங்கமணி | 2.72% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் திரு.சி.சிவதாணுமாலையன் 0.12% மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். இது மன்றத்தின் பா.ர்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு :** குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண். 210 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :22</u>**

கடந்த 10 தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட கடல் கொந்தளிப்பில் குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கடற்கரை பகுதிகளான கொட்டில்பாடு, மரமடி, அந்தோணியார் காலனி, துறைமுகப்பகுதி ஆகியவற்றில் கரை அரிப்பு ஏற்பட்டது. இதன் காரணமாக மீன்கள் ஏலம் நடைபெறும் கட்டிடத்தின் அஸ்திவாரம் மிகவும் சேதமடைந்ததின் காரணமாகவும் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் மேற்கொண்டு அரிப்பு ஏற்படாமல் தடுக்கும் விதமாகவும் மாவட்ட வருவாய் அலுவலர், கோட்ட வருவாய் அலுவலர், நகராட்சி மன்றத் தலைவர் மற்றும் ஆணையாளர் ஆகியோர் சம்பந்தப்பட்ட இடத்தினை நேரில் ஆய்வு செய்ததின் பேரில் மணல் மூட்டைகளை அடுக்கி பாதுகாத்திட Section 15–ல் உடனே பணி மேற்கொள்ள மாவட்ட வருவாய் அலுவலர் (DRO) அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் மணல் அரிப்பு ஏற்படாமல் தடுக்க போர்க்கால அடிப்படையில் மிகவும் அவசர அவசியம் கருதி ஆணையர் அவர்களின் Section 15-ல் சிறப்பு அதிகாரத்தின் கீழ் பணி மேற்கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி கோரியதற்கும், இதற்கான உத்தேச செலவினம் ரூ.12,000/– மதிப்பீட்டிலான பணி மேற்கொள்ள குறுகிய கால விலைப்புள்ளி 18.05.2007–ல் கோரப்பட்டது. இதன் விபரம் வருமாறு

| | | |
|---|---|---|
| 1 | திரு.சி.சிவதாணுமாலையன் | 0.51% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.பி.தங்கமணி | 0.51% மதிப்பீட்டைவிட அதிகம் |

இதில் 0.51% மதிப்பீட்டை விட குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.சி. சிவதாணுமாலையன் என்பவரது விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கி பணியினை முடித்தமைக்கு மன்றத்தின் பார்வை வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 211 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :23</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35681/2006/UPA–4 நாள் 12.01.2007–ன்படி, 2004 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டுள்ள வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலில் புதிதாக சேர்க்கவும், நீக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி புதிதாக வறுமைக்கோட்டின்கீழ் வாழும் குடும்பங்களின் பட்டியலில் சேர்க்க பெறப்பட்ட விண்ணப்பங்களை சர்வே படிவத்தின்படி நேரடி ஆய்வு செய்தும் .குடும்ப அட்டை உள்ளதன் அடிப்படையிலும் தயார் செய்யப்பட்ட 2007 ஆம் ஆண்டின் வறுமைக் கோட்டின் கீழ்வாழும் குடும்பங்களின் துணைப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 2004 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் எண்ணிக்கை. | : 2036 |
| தற்போது புதிதாக பெறப்பட்ட விண்ணப்பங்களின்படி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் சேர்த்தல் எண்ணிக்கை. | 816 |
| வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை. | **: 2852** |

**அ.குறிப்பு :** பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 212 பதிவு செய்யப்பட்டது.**

**<u>பொருள் எண் :24</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>**

குளச்சலிலிருந்து மார்த்தாண்டம் செல்வதற்கும், மார்த்தாண்டத்திலிருந்து குளச்சல் வருவாற்கும் தடம் எண். 88–ல் மூன்று பேருந்துகளும், தடம் எண்.88A –ல் மூன்று பேருந்துகளும் விடப்பட்டிருந்தாலும் தடம் எண். 88–ல் விடப்பட்டுள்ள ஒரு பேருந்து அவ்வப்போது 88 B என்று தட எண் பேரில் மார்த்தாண்டம் – குறும்பனைக்கு அடிக்கடி திருப்பி விடப்படுகிறது. அதே போன்று 88A தட எண்ணில் மூன்று பேருந்துகள் விடப்பட்டிருந்தாலும் இரண்டு பேருந்துகள் வெவ்வேறு சுற்றுவட்ட பாதை வழியாக திருப்பி விடப்படுகிறது. இதனால் கேரளாவிலிருந்து குளச்சல் வருகின்றவர்கள் மார்த்தாண்டத்திலிருந்து குளச்சல் வருவதற்கு பேருந்துகளுக்கு வேண்டி அதிக நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது. மார்த்தாண்டம் மற்றும் குளச்சல் இரண்டுமே நகராட்சிப் பகுதிகள். இந்த இரண்டு பகுதிகளுக்கு இடையிலான மக்கள் போக்குவரத்திற்கு தேவையான பேருந்துகள் விடப்படாமல் விடப்பட்டுள்ள பேருந்துகளும் நேர் பாதையிலிருந்து சுற்றுவட்ட பாதைக்கு அடிக்கடி திருப்பிவிடப்படுவதால் பயணிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மார்த்தாண்டத்திலிருந்து தேங்காய்பட்டணம் செல்வதற்கு மிக அதிக அளவில் பேருந்துகள் விடப்பட்டுள்ளன. ஆனால் மார்த்தாண்டத்திலிருந்து குளச்சலுக்கு செல்வதற்கும், வருவதற்கும் மிகக் குறைந்த அளவே பேருந்துகள் விடப்பட்டுள்ளன. எனவே புதியதாக தடம் எண். 88–ல் மூன்று பேருந்துகளும், தடம் எண். 88A–ல் மூன்று பேருந்துகளும் விடுவதற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர், நாகர்கோவில் அவர்களைக் கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 213 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :25</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>**

குளச்சல் அண்ணாசிலை சந்திப்பிலிருந்து பெரியபள்ளி சாலை வழியாக, பெரியபள்ளி சந்திப்பு மற்றும் கடற்கரை சந்திப்பு வழியாக நகராட்சி பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்திற்கு குளச்சல் to நாகர்கோவில் P.P (Point to Point) பேருந்துகள் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பண்டகசாலைபுரம், ஆசாத் நகர் மற்றும் கொட்டில்பாடு, சிங்காரவேலன் காலனி, பெரியநாயகி காலனி, அந்தோணியார் காலனி மற்றும் சுனாமி மறுவாழ்வு குடியிருப்பு பகுதிகளான தோழமை காலனி, எபிகோர் காலனி, K.S.S.S. காலனி, மாதா அமிர்தானந்தமயி காலனி, ஆகிய பகுதிகளில் வாழும் மக்களின் நலன் கருதி பெரியபள்ளி சந்திப்பில் மேற்படி குளச்சல்–நாகர்கோவில் (Point to Point) நிறுத்தத்திற்கும் அதேபோன்று குளச்சல் to நாகர்கோவில் செல்லும் T.S.S. (தடம் எண். 5 B ) பேருந்து நிறுத்தத்திற்கும் உத்தரவு வழங்க தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பொது மேலாளர், நாகர்கோவில் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 214 ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 26</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தலைவர் அவர்கள் கொண்டுவரும் தீர்மானம் :</u>**

மார்த்தாண்டத்திலிருந்து பெங்களூருக்கு கருங்கல் மற்றும் திங்கள்சந்தை வழியாக தமிழ்நாடு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்து தினந்தோறும் மதியம் 1.30 மணிக்கு இயக்கப்பட்டு வருகிறது. குளச்சல் நகராட்சிப் பகுதி வளர்ச்சியடைந்து வரும் பகுதி மீன்பிடித் துறைமுகமும் வார்த்தக துறைமுகமும் அமைக்கப்படுவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற, வளர்ச்சியை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற ஒரு பகுதி. மேற்படி பேருந்து கருங்கலிலிருந்து குளச்சல் வழியாக திங்கள்சந்தைக்கு செல்வதற்கு S.E.T.C. மார்த்தாண்டம் கிளை மேலாளருக்கு பலமுறை கேட்டுக்கொண்டதற்குப் பின்னரும் இதுகாறும் மேற்படி மாற்றம் செய்யப்படாமலிருப்பது மிகவும் வருந்தத் தக்கது. எனவே மேற்படி விரைவு பேருந்தினை பெங்களூர் செல்லும் போதும், பெங்களூரிலிருந்து திரும்பி வரும்போதும் குளச்சல் மார்க்கமாக செலுத்துவதற்கு ஆவன செய்யுமாய் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனரைக் கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 215 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் :27</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 17–ம் வார்டு உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்</u>**

**(1)** 17–ம் வார்டுக்குட்பட்ட சிங்கன்காவு பகுதியில் பாய்ந்து வரும் மருத்துவமனை கழிவுகளை இரு புறமும் உறுதியான கான்கிரீட் கால்வாய் அமைத்து மேல் மூடி அமைத்து கழிவுநீர் மற்றப் பகுதிகளில் பரவாமல் தடுக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**(2)** நரிக்கல் கிணற்றிலிருந்து பாம்பூரி வாய்க்காலின் குறுக்காக இரும்பிலி செல்வதற்கு பாலம் அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 216 பொருள் எண் 27–ன் துணைப் பொருட்கள் இரண்டும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 28</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 18–ம் வார்டு உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்</u>**

(1) குளச்சல் பெரியபள்ளி பஸ் நிறுத்தத்தில் தற்போதைய போக்குவரத்து மாற்றத்திற்கு பிறகு ஏராளமான பயணிகள் பயணம் மேற்கொள்கிறார்கள். ஆனால் இந்த நிறுத்தத்தில் (P.P) பாயிண்ட்–டு–பாயிண்ட் டைம் சேவிங் சர்வீஸ் (T.S.S. ) போன்ற பேருந்துகள் நின்று செல்ல நிறுத்தம் அனுமதிக்கப்படவில்லை. எனவே மேற்படி பேருந்து நிறுத்தத்தில் T.S.S., P.P. பேருந்துகள் நின்று செல்ல அனுமதி வேண்டி போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநருக்கு கடிதம் அனுப்ப மன்றம் தீர்மானிக்கலாம்.

(2) குளச்சல் நகரம் ஒரு புராதனமான வரலாற்று சிறப்புமிக்க கடற்கரையை கொண்ட நகரம். இங்கு அமைந்துள்ள படகணையும் தளத்தினருகில் உள்ள கடற்கரை பகுதியில் உள்ளூர், வெளியூர் பொதுமக்கள் மாலை வேளைகளில் தினமும் ஏராளமானவர்கள் வந்து செல்கிறார்கள். தற்போது குளச்சல் நகரில் பூங்கா எதுவும் இல்லாத நிலையில் மேற்படி கடற்கரை பகுதியில் தமிழக சுற்றுலா மேம்பாட்டு கழகத்தின் சார்பாக பூங்கா ஒன்று அமைத்தால் அது குளச்சல் கடற்கரைக்கு மேலும் அழகையும், வருமானத்தையும் ஈட்டித் தரும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. இதைப்போன்ற ஒரு தீர்மானம் 2004–ம் ஆண்டு நமது நகர்மன்றத்தில் நிறைவேற்றப்பட்டதை மீண்டும் வலியுறுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 217 பொருள் எண் 28–ன் துணைப் பொருட்கள் இரண்டும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 29</u>**

**<u>குளச்சல் நகராட்சி மன்றத்தின் 19–ம் வார்டு உறுப்பினர் கொண்டு வரும் தீர்மானம்</u>**

குளச்சல் காந்தி ஜங்சனிலிருந்து நெசவாளர் தெருவிற்கு போகும் பாதையில் மின்கம்பம் உள்ளது. (FI/34) மேற்படி மின்கம்பத்தில் புதிய மின்விளக்கு அமைக்க மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண். 218 ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத்தலைவர்
குளச்சல் நகராட்சி

<u>குளச்சல் நகராட்சி</u>

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் மே திங்கள் 29–ம் நாள் செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெறும். தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண் : 1</u>

குளச்சல் நகராட்சி சுனாமி நிவாரணப் பணிகள் தொடர்பாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண். ந.க.எண். 20555/2007/TSU நாள் 17.05.2007ன்படி கீழ்கண்ட இரண்டு பணிகளுக்கான டெண்டர்கள் ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் விபரம் | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்த விபரம் |
|---|---|---|---|
| 1 | கொட்டில்பாடு, ஜோசப் பெனடிக்ட் காலனி மற்றும் அந்தோணியார் காலனி ஆகிய பகுதிகளில் சிமென்ட் தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் மற்றும் கொட்டில்பாட்டில் மூன்று சிறு பாலங்கள் கட்டுதல். | திரு.V. இருதயதாஸ் | மதிப்பீட்டைவிட 1 9.47% அதிகம் |
| 2 | மலிக்காகிணறு, வெள்ளிப்பிள்ளையார் கோயில் பகுதிகளில் தார்தளம் அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல். | திரு.G. முருகன் | மதிப்பீட்டைவிட 1 9.84% அதிகம் |

<u>அ.குறிப்பு :</u> பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண். 219 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.2**

குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2007–08–ன்கீழ் குளச்சல் நகராட்சிக்கு கீழ்குறிப்பிட்டுள்ள திட்டப் பணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண். ஆ3/32640/07 நாள் 08.03.2007–ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்கின்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பணியின் விபரம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளச்சல் நகராட்சி முஸ்லீம் ஜும்மா பள்ளிவாசல் கல்லறை தோட்டத்திற்கு சுற்றுசுவர் கட்டுதல். | 3.00 |

<u>அ.குறிப்பு :</u> பதிவு செய்யலாம்.
**தீர்மானம் எண். 220 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3**

குளச்சல் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் Vermi Compost தொடர்பான (மண் புழு உரம் தயாரித்தல்) உள்கட்டமைப்புகளை நிறுவுவதற்கான திட்டங்கள் தயாரிக்கவும் மற்றும் இதைத் தொடர்ந்து சுய உதவிக் குழுக்கள் மூலம் மண்புழு உரம் தயாரிப்பதற்கான பயிற்சிகள் வழங்கவும் இந்நகரின் தூய்மையை பாதுகாத்திடவும் இப்பணிக்குரிய ஆலோசனை வழங்கிட Consultant (ஆலோசகர்) நியமித்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.
**அ.குறிப்பு** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 221 அலுவலகக் குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகராட்சி மன்றத்தலைவர்
குளச்சல் நகராட்சி